

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் சென்னை, புரசைவாக்கத்தில் உள்ள லட்சுமி மகாலில் தி.மு.க. GEN–Z சந்திப்பில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கொளத்தூர், அம்பத்தூர், வில்லிவாக்கம்,திருவிக நகர், எழும்பூர், துறைமுகம் ஆகிய தொகுதிகளில் உள்ள 300 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்ற கூட்டத்தில் டி.ஹைமாவதி, எழில்துரை, வனிதா குமாரி, இலக்கியா, கீர்த்தனா, தீனா மற்றும் பல இளைஞர்கள் பல்வேறு கருத்துக்களை குறிப்பாக வரும் தலைமுறையிடையே திராவிடத்தை எப்படி கொண்டு சேர்ப்பது, திராவிடம் இதுநாள் வரை செய்த மாற்றங்கள்.. கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கொண்டு வந்த திட்டங்கள் அதனால் விளைந்த மாற்றங்கள், பெண்களுக்கு சொத்துரிமை, அனைத்து சாதியினரும் அர்ச்சகர், இட ஒதுக்கீடு ,சமூக நீதி,திராவிடத்தை வளர்த்த தலைவர்களுடைய வரலாறு,ரூட்மாபியா என பல்வேறு கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., மேயர் பிரியாராஜன்,கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா,சொ.வேலு.எம்.சி. ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம் சி,க.வினோத் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# அறிவாலயத்தின் ஆயுதக் கிடங்கு!

**1980**ஆம் ஆண்டு ஜூலை மாதம் இருபதாம் தேதி மதுரை ஜான்சி ராணி பூங்காவில் தி.மு.க. இளைஞர் அணியின் துவக்க விழாவை முத்தமிழறிஞர் கலைஞர் தொடக்கி வைத்தார். இந்திய அரசியல் வரலாற்றிலேயே ஒரு அரசியல் கட்சி அதன்; இளைஞர் அணியை அன்று தான் முதன் முதலில் தோற்றுவித்தது.

1831ம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஒருநாள் பிரான்ஸ் நாட்டில் இளைஞர்கள் சிலர்; ஓர் அமைப்பை உருவாக்கினார்கள். மிகச் சிறந்த சிந்தனையாளர், எழுத்தாளர் ஜோசப் மாஜினியின் தலைமையில் அவரது மாணவன் ஜோசப் கரிபால்டி உள்ளிட்ட இளைஞர்கள் கூடி புரட்சி அமைப்பை உருவாக்கினார்கள். அமைப்புக் கூட்டம் நடந்த அறையில் ‘இளைய இத்தாலி “ **(Young Italy)** என்ற பதாகை மின்னியது.

அதுபோல சமத்துவ, சகோதரத்துவ, ஜனநாயக, சமூக நீதி காக்கும் கழகத்தின் இளைஞர் அணி தொடங்கப்பட்ட போது மேடையில் ‘தி.மு.க. இளைஞர் அணி” என்ற பதாகை மின்னியது.



**அறந்தாங்கி வெங்கடேசன்**

தன்னுடைய 14ம் வயதில் கோபாலபுரத்தில் 1967ம் ஆண்டு ‘இளைஞர் தி.மு.க.” வைத் தொடங்கி இளம் வயதினரை கழகத்தின்பால் ஈர்த்த நமது கழகத் தலைவர் 1980ல் இளைஞர் அணிக்குத் தலைமைப் பொறுப்பேற்றார்.

நம் தாய்நாட்டு இளைஞர்களே! வாருங்கள் நம் கொடியைப் பட்டொளி வீசிப் பறக்கச் செய்து நம் இனப்படையை வழிநடத்த வாருங்கள்! என்று அன்றைக்கு கரிபால்டி அழைத்தார்.

இன்பத் தமிழ்நாட்டு இளைஞர்களை இயக்கத்தில் சேர நம் தலைவர் அழைத்தார்.

ஆரம்பத்தில் கழகத் தலைவர், திருச்சி சிவா, பரிதி இளம்வழுதி, தாரை மணியன், வாலாஜா அசேன் ஆகிய ஐந்து பேர் கொண்ட அமைப்புக் குழு உருவாக்கப்பட்டது. பின்னர் முகவை பஞ்சவர்ணம், நெல்லை ஜெயம் ஜீலியஸ் ஆகியோரோடு ஏழு பேர் கொண்ட குழுவாக இயங்கியது. அந்தக் குழு மாவட்டம் தோறும் சென்று இளைஞர் அணிக்கு உணர்வுள்ள இளைஞர் பட்டாளத்தை தேர்வு செய்தது.

தமிழக இளைஞர்களைக் கவர்ந்திழுத்து மாபெரும் கொள்கைக் கூட்டமாக இளைஞர் அணியினை கழகத் தலைவர் உருவாக்கினார்.

2019 ஜ{லை மாதம் 4ஆம் தேதி உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து இளைஞர் அணியின் எழுச்சி மிகுந்த இரண்டாவது அத்தியாயம் தொடங்கியது. இளைய சமுதாயத்தின் எழுச்சி முழக்கத்தில் கழகக் கொடி கம்பீரமாகப் பறக்கத் தொடங்கியது.

**இனம் காக்கும் கழகத்தின் துணை ராணுவம்;;**
**அண்ணா அறிவாலயத்தின் ஆயுதக் கிடங்கு!**
**தி.மு.க. இளைஞர் அணி வெல்லட்டும்!**

# காரைக்குடி திராவிடப் பெரும் புலவர் ஆ.பழநி நூல்கள் நாட்டுடைமை! ‘திராவிட மாடல்’ முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி பாராட்டு விழா!

## முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமை! கவிச்சுடர் கவிதைப்பித்தன் சிறப்புரை!





*காரைக்குடி, ஜூலை 21 -*

காரைக்குடி மண்ணின் மைந்தரும், மூத்த தமிழறிஞருமான திராவிடப் பெரும் புலவர் ஆ.பழநி அவர்கள் எழுதிய 18 நூல்களை கடந்த தி.மு.க. ஆட்சியில் திராவிட மாடல் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நாட்டுடைமை ஆக்கி அன்னாரின் குடும்பத்தாருக்கு ரூ 10 இலட்சம் பரிவுத் தொகையினையும் வழங்கினார்கள்.

அதற்காக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி அவர்களுக்கும் நன்றி பாராட்டும் நிகழ்ச்சி காரைக்குடி கிருஷ்ணா கார்டன் அரங்கில்

சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்விற்கு தி.மு.க. மாநில இலக்கிய அணி புரவலரும் மேனாள் அமைச்சருமான மு.தென்னவன் தலைமை தாங்கினார்.

புலவர் ஆ.பழநி அறக்கட்டளை தலைவரும், புலவரின் மரபுரிமை வாரிசுமான சுப.அழகுபாண்டியன் வருகை தந்த அனைவரையும் வரவேற்று பேசினார்.

காரைக்குடி மாநகர துணை மேயரும், மாநகர தி.மு.க. செயலாளருமான நா.குணசேகரன், வல்லநாடு கல்விக்குழும இயக்குனர், பொறியாளர் சா.நடராசன், புலவரின் பேரன் தொழிலதிபர் கண்டனூர் நாராயணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கலைக்கோயில் நாட்டியப் பள்ளி இயக்குனர் கலைமாமணி முனைவர் மா.சுப.சரளா, திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் ச.பிரின்சு என்னாரெசு பெரியார், தி.மு.க. மாநில இலக்கிய அணி செயலாளர் கவிச்சுடர் இரா.சு. கவிதைப் பித்தன் ஆகியோர் பாராட்டரங்கில் உரையாற்றினார்கள்.

திராவிட இயக்க மூத்த முன்னோடிகள் அண்ணா தமிழ்க் கழக செயலாளர் அ.கதிர்வேல், தி.மு.க. மேனாள் நகர்மன்ற உறுப்பினர் 90 வயது எட்டிய சொக்கநாதன், திருக்குறள் மெய்யுரை எழுதியவரும், மேனாள் நகர்மன்ற உறுப்பினருமான குறள் மிகு சுப. பரமசிவம், தி.மு.கழக தலைமை கழக சொற்பொழிவாளரும், மதுரை திருக்குறள் மற்ற தலைவருமான மு.க. இராமகிருஷ்ணன் ஆகியோருக்கு சிறப்பு செய்யப்பட்டது.

அறக்கட்டளை செயலாளர் தி.என்னாரெசு பிராட்லா இணைப்புரை வழங்கிட, அறக்கட்டளை பொருளாளர் சிவ. கிருஷ்ண பிரசாத் நன்றியுரையாற்றினார்.

இந்த நிகழ்வில் திராவிடர் கழக மாவட்ட துணைத் தலைவர் கொ. மணி வண்ணன், மாவட்ட துணை செயலாளர் இ.ப. பழனி வேலு, மாவட்ட ப.க. செயலாளர் ந.செல்வராசன்,

தேவகோட்டை நகர தலைவர் வீர.முருகப்பன், பகுத்தறிவாளர் கழக பொறுப்பாளர் அ.அரவரசன், தேவகோட்டை நகர அமைப்பாளர் நா.பாரதிதாசன், பொதுக்குழு உறுப்பினர்கள்தி.செயலெட்சுமி, பலவான்குடி ஆ.சுப்பையா, கல்லல் ஒன்றிய செயலாளர் கொரட்டி வீ.பாலு, சூரக்குடி மணி வண்ணன், அமராவதி புதூர் சண்முகநாதன், பேராசிரியர் நெல்லை பாபு, துரை.குமணன்,

தி.மு.கழக மாவட்ட பொருளாளர் சுப.துரைராசு, மாவட்ட பிரதிநிதி அ.சேவியர், நகர தி.மு.க. அவைத்தலைவர் சன்.சுப்பையா,நகர மேனாள் இளைஞரணி அமைப்பாளர் ஆர்.கே.பி. முனீஸ்வரன் நகர்மன்ற உறுப்பினர் கலா காசிநாதன், மேனாள் நகர்மன்ற உறுப்பினர்கள்

இராம.அன்பழகன், மெ.பழநியப்பன், தி.மு. கழக வட்டச் செயலாளர் இரா.இராதாகிருஷ்ணன்,

காரைக்குடி தொழில் வணிகக்கழக தலைவர் கண்ணப்பன், பொருளாளர் சையது, காங்கிரசு கமிட்டி நகர தலைவர் மெ.சண்முகதாஸ், குழந்தைகள் நல மருத்துவர் து.கார்த்திகேயன், தமிழ் இன உணர்வாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், நகரின் முக்கிய பிரமுகர்கள், தொழிலதிபர்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

புலவர் ஆ.பழநி குடும்பத்தினர் அனைவருக்கும் சிற்றுண்டி,தேநீர் வழங்கி வரவேற்றனர்.

திராவிடர் கழக தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் பேரா. சுப.வீ, இராமசாமி தமிழ்க் கல்லூரி மேனாள் முதல்வர் தெ.முருகசாமி ஆகியோர் அனுப்பிய வாழ்த்துச் செய்தி படிக்கப்பட்டு நன்றி தெரிவித்தும், புலவர் ஆ.பழநி அவர்களின் தனிச் சிறப்புகள் அடங்கிய ஒரு அறிக்கையும், காரைக்குடி அண்ணா தமிழ்க் கழகம் வெளியிட்ட நன்றி கடிதமும் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

# மாற்றுக்கட்சியில் இருந்து வர்றவங்களுக்கு பதவியா?

## எம்.எல்.ஏ.வை முற்றுகையிட்டு த.வெ.க. தொண்டர்கள் வாக்குவாதம்!

*மதுரை, ஜூலை 21 -*

மதுரையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு முகாமை தொடங்கி வைக்க சென்ற த.வெ.க. எம்.எல்.ஏ. காரை, முற்றுகையிட்டு கட்சி பதவி கேட்ட தவெகவினரால் பரபரப்பு ஏற்பட்டது. மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட விளாங்குடி பகுதியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு முகாம் நேற்று நடந்தது. த.வெ.க. மதுரை தெற்கு மாவட்டச் செயலாளரும், மேற்கு தொகுதி எம்.எல்.ஏ.வுமான தங்க பாண்டியன் தொடங்கி வைத்தார்.

இதற்காக விளாங்குடி பகுதிக்கு காரில் வந்த எம்.எல்.ஏ. தங்கப்பாண்டியனை, த.வெ.க. தொண்டர்கள் முற்றுகையிட்டனர். அவரிடம், “நாங்கள் கட்சியில் தொடர்ந்து கடுமையாக பணியாற்றி வர்றோம். ஆனால், எங்களுக்கு எந்த பதவியும் தர மாட்டேங்குறீங்க... மாற்றுக்கட்சியில இருந்து வந்தவங்களுக்கு பதவியை அள்ளி தர்றீங்க... விஜய் நற்பணி மன்றத்துல இருந்து நாங்க கடுமையாக உழைக்கிறோம்... எங்களுக்கு பதவி தர வேண்டாமா...” என கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதை சில த.வெ.க. தொண்டர்கள் ‘வழக்கம்போல’ செல்போனில் வீடியோ எடுத்தனர்.

இதனால் டென்ஷன் ஆன எம்.எல்.ஏ. தங்கப் பாண்டியன், “வீடியோ எல்லாம் எடுக்காதீங்க... உடனே போனை கட் பண்ணுங்க... ஆமா காரை மறித்துத்தான் பதவியெல்லாம் கேட்பீங்களா? எதுவானாலும் மனுவாக எழுதி கொடுங்க. முயற்சி பண்ணலாம். இப்ப வழியை விடுங்க...” என்றார். அதற்கு தொண்டர்கள், “மாவட்டச் செயலாளர் என்பதால் தான் நேரில் பேசுகிறோம்” என்று தொடர்ந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் எம்.எல்.ஏ. தங்க பாண்டியன், அங்கிருந்து காரில் வேகமாக புறப்பட்டு சென்றார்.

## பழநி கோயிலுக்கு சொந்தமான ரூ.100 கோடி நில மோசடி விவகாரம்:

# விழுப்புரம் அரசுப் பள்ளி ஆசிரியர் வீட்டில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் அதிரடி சோதனை!

## முக்கிய ஆவணங்கள் சிக்கின; வீட்டுக்கு சீல் வைப்பு!

விழுப்புரம், ஜூலை 21 –

பழநி கோயிலுக்கு சொந்தமான ரூ.100 கோடி நில மோசடி தொடர்பாக விழுப்புரம் அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர் வீட்டில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் பல மணி நேரம் சோதனை நடத்தி முக்கிய ஆவணங்களை கைப்பற்றினர். இதனை தொடர்ந்து அவரது வீட்டிற்கு சீல் வைக்கப்பட்டது. திண்டுக்கல் மாவட்டம் பழநி தண்டபாணி சுவாமிகள் மடத்திற்குச் சொந்தமான 100 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலம், நீதிமன்ற உத்தரவுகளை மீறி போலி ஆவணங்கள் மூலம் வெறும் 2 கோடி ரூபாய்க்கு பதிவு செய்யப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதுதொடர்பாக, பழநி கோயில் நிலங்கள் பிரிவு கண்காணிப்பாளர் முருகானந்தம் அளித்த புகாரின் பேரில், சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் உள்ளிட்ட 4 பேர் மீது கூட்டுச்சதி, மோசடி உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. பல கோடி ரூபாய் மதிப்புள்ள கோயில் சொத்து மற்றும் அரசு அதிகாரிகள் தொடர்புடைய விவகாரம் என்பதால், இந்த வழக்கை சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றி தமிழக காவல்துறை தலைமையகம் உத்தரவிட்டது. இதையடுத்து, டிஎஸ்பி அஜய்தங்கம் தலைமையிலான சி.பி.சி.ஐ.டி. குழுவினர் பழநியில் கள ஆய்வு மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து, பழநி அறநிலையத் துறையைச் சேர்ந்த முருகானந்தம், செயல் அலுவலர் கணபதி, ஆய்வாளர் சிவனேசன் உள்ளிட்ட அதிகாரிகளிடம் சி.பி.சி.ஐ.டி. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சஜிதா நேரில் விசாரணை நடத்தினார். இதனிடையே நிலமோசடி தொடர்பாக யார் விற்பனையில் ஈடுபட்டது. அதில் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பது குறித்து சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணை நடத்தினர். அதில் விழுப்புரம் என்.ஜி.ஜி.ஓ. காலனி காமராஜர் நகர் பகுதியில் வசிக்கும் முருகதாஸ் என்பவர் திருவெ ண்ணைநல்லூர் அரசு நிதி உதவி பெறும் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறார்.

பழநி கோயில் நில மோசடி தொடர்புடைய குற்றச்சாட்டின் அடிப்படையில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் நேற்று முன்தினம் இரவு இவரது வீட்டிற்கு சென்றனர். அப்போது வீட்டின் முன்பக்க கதவு பூட்டப்பட்டி ருந்ததால், பூட்டை உடைத்து போலீசார் விடிய விடிய சோதனையில் ஈடுபட்டனர். பல மணி நேர சோதனைக்கு பிறகு அவரது வீட்டில் இருந்து முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. இதனை தொடர்ந்து அவரது வீட்டிற்கு நேற்று காலை சி.பி.சி.ஐ.டி. போலீசார் சீல் வைத்தனர்.

பின்னர் வீட்டில் ஆள் இல்லாத நிலையில் முருகதாசுக்கு சம்மன் அனுப்பி காவல் நிலையத்தில் நேரில் அழைத்து விசாரணை நடத்த போலீசார் திட்டமிட்டுள்ளனர். பழனி கோயில் நில மோசடி தொடர்பாக விழுப்புரம் ஆசிரியர் வீட்டில் சோதனை நடத்தி, வீட்டுக்கு சீல் வைக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நெல்லையில் 2வது நாளாக விசாரணை: பழநி முருகன் கோயிலுக்கு சொந்தமான நிலம் மோசடி விற்பனையில் நெல்லையைச் சேர்ந்த சிலருக்கு தொடர்பு இருப்பது உறுதியானது.

இதையடுத்து பாளையங்கோட்டை வி.எம். சத்திரத்தைச் சேர்ந்த குமரகுருபரன் (46), நெல்லை டவுன் சாலியர் தெருவைச் சேர்ந்த டெக்கரேஷன் தொழில் செய்து வரும் சண்முகசுந்தரம் (43) மற்றும் நெல்லை டவுன் சம்பந்தர் தெருவைச் சேர்ந்த சிவகுமார் (41) ஆகியோரது வீடுகளில் அதிரடி சோதனை நடத்திய சிபிசிஐடி போலீசார் மூன்று குழுக்களாக பிரிந்து அவர்களிடம் நேற்று முன்தினம் தீவிர விசாரணை நடத்தினர்.

அப்போது சில ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. இந்த விசாரணை முழுவதும் வீடியோவில் பதிவு செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து சம்பந் தப்பட்ட மூன்று பேரின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் அசையும், அசையா சொத்துக்கள் குறித்து சி.பி.சி.ஐ.டி. போலீசார் நேற்று 2வது நாளாக தீவிர விசாரணை நடத்தினர். மேலும் அவர்களுடைய வங்கி கையிருப்பு, லாக்கர்களை திறந்து சோதனை நடத்த வுள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

**★ சமூக வலைதளங்களில் உலா வரும் பத்திர ஆவணம்**

பழநி தண்டபாணி சுவாமிகள் அறக்கட்டளை சார்பில் ரூ.2 கோடிக்கு 1.40 ஏக்கர் நிலத்தை சேதுபதி மற்றும் வெள்ளத்துரை ஆகியோருக்கு பதிவு செய்து கொடுத்த பத்திரம் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இந்த பத்திரம் ஒட்டன்சத்திரத்தைச் சேர்ந்த முத்திரைத்தாள் விற்பனையாளர் ராஜேஸ்வரி என்பவரிடமிருந்து கடந்த மார்ச் 27ம் தேதி வாங்கப்பட்டுள்ளது. பாப்பன்குளத்தைச் சேர்ந்த வெள்ளத்துரை வாங்கி உள்ளார். 72 தாள்களை கொண்ட பத்திரமாக தயாரிக் கப்பட்டுள்ளது. ஆனால், முதல் 5 பக்கங்கள் மட்டுமே சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

பொதுவாக, பத்திரப்பதிவிற்கான அரசு கட்டணம் அதன் அரசு மதிப்பீட்டில் 11 சதவீதம் ஆகும். சம்பந்தப்பட்ட இடம் பழநி நகர எல்லைக்குள் உள்ளது. தற்போது அரசு மதிப்பீடு இப்பகுதியில் சதுர அடிக்கு சுமார் ரூ.1,750 ஆக உள்ளது. இதன்படி 1.40 ஏக்கருக்கு சுமார் ரூ.11 கோடிக்கு மேல் அரசு மதிப்பீடு இருக்கும். ஆனால், இடத்தை விவசாய நிலமாக குறிப்பிட்டு ரூ.2 கோடி மதிப்பீட்டில் பத்திரப்பதிவு செய்துள்ளனர்.

இதன்மூலம் நிலத்தை பத்திரப்பதிவு செய்ய மதிப்பீடு செய்ததிலும் முறைகேடு நடந்துள்ளது தெரியவந்துள்ளது. பத்திரம் கிரையம் செய்ய வழங்கப்பட்ட காசோலைகள் செல்லுபடியாகவில்லை. அதிகாரிகள் இவ்விஷயங்களில் எந்த கவனமும் கொள்ளவில்லை. இதன்மூலம் பத்திரப்பதிவு விவகாரத்தில் அதிகாரிகள் உடந்தை என்பது உறுதியாகிறது. சி.பி.சி.ஐ.டி. போலீசார் சார்பதிவாளர் மற்றும் மாவட்ட பதிவாளரை காவலில் எடுத்து விசாரித்தால் மட்டுமே முறைகேடு பத்திரப்பதிவிற்கு காரணமான வி.வி.ஐ.பி.க்களின் அடையாளம் தெரியுமென பக்தர்கள் தெரிவிக்கின்றனர்.

**★ நிலத்தின் ஆவணங்கள் சேகரிப்பு**

ரூ.100 கோடி நில முறைகேடு தொடர்பாக, 4வது நாளான நேற்று சி.பி.சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் சந்தான லட்சுமி தலைமையில் 5க்கும் மேற்பட்ட போலீசார் பழநி தாலுகா அலுவலகத்தில் விசாரணை மேற்கொண்டனர். வருவாய்த்துறை மற்றும் சர்வேயர் பிரிவு அதிகாரிகளிடம் பிரச்னைக்குரிய இடத்தின் அரசு வரைபடம் உள்ளிட்ட ஆவணங்களை சேகரித்தனர். தொடர்ந்து இடத்தின் மீதான வரி வசூலிப்புகள், ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்ய யாரும் விண்ண ப்பத்திருந்தனரா, இடத்தின் ஆவணங்களை வேறு யாரும் பெற்றுச் சென்றனரா என்பது குறித்தும் விசாரித்தனர். சுமார் 2 மணி நேர விசாரணைக்கு ப்பின், சில ஆவணங்களுடன் அவர்கள் திரும்பிச் சென்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கட்பீஸ் அ. பழனி**
**ஜூலை 21 (2019)**



**இளமைக் காலம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**வடசென்னை மாவட்டம், சார்பு மன்ற நிர்வாகி, 10வது வட்ட பகுதி பிரதிநிதி, இராயபுரம் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர், 1996 முதல் 2016 வரை தொடர்ந்து இராயபுரம் பகுதிச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**2006ல் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்கள் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**